# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No.13 /2017

Deposition of witness for: PW - 7

| | | | |
|---|---|---|---|
| Name | : Sethurayan | Father/Husband Name:Kalyanakumar | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 11.01.2021 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2021.

முதல் விசாரணை:

நான் வெள்ளரிப்பட்டியில் வசிக்கிறேன். லோடுமேனாக வேலை செய்கிறேன். அ.சா.1ஐ தெரியும். வழக்கில் இறந்துபோன விஜய்முருகன் என்பவரையும் தெரியும். எதிரியை பார்த்ததில்லை. கடந்த 11.07.15ம் தேதி மாலை 07.30 மணியளவில் நரசிங்கமப்பட்டியிலிருந்து அரிட்டாபட்டி செல்லும் ரோட்டில் ஆண்டி கோயில் அருகில் நான் இருசக்கரவாகனத்தில் சென்றுகொண்டிருந்தபோது ஸ்பிலண்டர் இருசக்கரவாகனம் ரோட்டின் ஓரத்தில் கிடந்தது, நான் அருகில் சென்று பார்த்தபோது விஜய்முருகனின் வண்டி என்று தெரிந்தது. நான் வந்துகொண்டிருந்தபோது வேன் ஒன்று சென்றதால் அந்த வேன்தான் இடித்திருக்கவேண்டும் என்று நினைத்து விஜய்முருகனை நான் தேடினேன், அவர் ரோட்டின் வலதுபுறத்தில் ஒரு பள்ளத்தில் கிடந்தார். நான் சென்று பார்த்தபோது அவருக்கு கையில் சிறாய்ப்பு காயமும், பின்பக்க தலையில் பலத்த இரத்தக்காயத்துடன் இருந்தார். அந்த வழியாக வந்த வேன் ஒன்றில் அவரை ஏற்றி மதுரை மீனாட்சி மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அங்கு பார்க்கமுடியாது என்று சொன்னதால் மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் சேர்த்தோம். அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர் இறந்துவிட்டதாக கூறினார். பின்னர் அவரது தாத்தாவிற்கு போன் மூலம் நான தகவல் சொன்னேன். நான் சம்பவத்தின்போது அரிட்டாபட்டி சூப்பர் ரப்பர் கம்பெணியிலிருந்து டி.வி.எஸ் கம்பெணிக்கு சென்றுகொண்டிருந்த வேனை நான் பார்த்ததால் அந்த வேனை பற்றி டி.வி.எஸ் கம்பெணி சென்று விசாரித்தேன். அப்போது அங்கிருந்த வேனில்

வலது முன்பக்கத்தில் மர்க்காடு உடைந்திருந்தது. முன்பக்க கண்ணாடியில் கைப்பட்ட அடையாளத்துடன் கண்ணாடி தெறித்திருந்தது, இரத்தமும் தெறித்திருந்தது. போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்ன அனைத்து விபரங்களையும போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். அவர்கள் அந்த விவரத்தை எல்லாம் எழுதி வேனை போட்டோ எடுத்து சென்றனரா என்றால் சரிதான். நான் சொல்லும் டி.வி.எஸ் கம்பெணி எங்குள்ளது என்றால் வெள்ளரிப்பட்டியில் உள்ளது. அந்த கம்பெணிக்கும், டி.வி.எஸ். ரப்பர் கம்பெணிக்கும் எவ்வளவுதூரம் இருக்கும் என்றால் 7 கி.மீ. தூரம் இருக்கும். விபத்தில் உட்பட்ட நபரை எற்றிச்சென்ற வாகனத்தை எத்தனை நிமிடத்தில் பார்த்தேன் என்றால் 7 நிமிடத்தில் பார்த்தேன். அந்த ரோட்டில் அதிகமான வாகனம் வந்து செல்லுமா என்றால் கம்பெணி வண்டிகள் நிறைய செல்லும். போலீசார் கேட்டுக்கொண்டதால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.